**EXECUTIVE OFFICER, GRADE- III (GROUP- VII- B SERVICES) (TAMIL NADU HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS SUBORDINATE SERVICE)**

1. The Fort Panchalam Kurichi was attacked by

   a. Jackson    **b. Major Banerman**    c. General Malartic

   d. General Boscawan    e. Answer not known

   பாஞ்சாலம் குறிச்சி கோட்டையின மீது தாக்குதல் தொடுத்தவர் ___________ ஆவார்.

   a. ஜாக்சன்    b. மேஜர் பேனர்மான்    c. ஜெனரல் மலார்டிக்

   d. ஜெனரல் பாஸ்காவென்    e. விடை தெரியவில்லை

2. Arrange it in chronological order

   1. Under the leadership of EV Ramasamy, Justice party was reorganized as 'Dravidar Kazhagam'
   2. EV Ramasamy elected as president of Justice party when he was in jail.
   3. EV Ramasamy organized Dravida Nadu conference demanding separate and independent "Dravida Nadu'
   4. The Congress won the Madras Legislative Assembly election.

   a. 1 3 2 4    b. 3 4 1 2    **c. 4 2 3 1**

   d. 2 1 3 4    e. Answer Not known

   கால வரிசைப் படி பட்டியலிடுக:

   1.ஈ.வே.ராமசாமி தலைமையில் நீதிக் கட்சி "திராவிட கழகம்" என மாற்றி அமைக்கப்பட்டது.
   2.ஈ.வே.ராமசாமி சிறையில் இருந்துக் கொண்டு நீதிக்கட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
   3.ஈ.வே.ராமசாமி திராவிட நாடு மாநாடு நடத்தி அதில் சுதந்திர மற்றும் தனி திராவிட நாடு கோரிக்கை முன் வைத்தல்.
   4. மெட்ராஸ் சட்டசபை தேர்தலை காங்கிரஸ் கட்சி வென்றது.

   a. 1 3 2 4    b. 3 4 1 2    c. 4 2 3 1

   d. 2 1 3 4    e. விடை தெரியவில்லை

3. River Sanctuary in Tamil Nadu is

   a. Kalakad Mundanthurai Tiger Reserve    **b. Sathyamangalam Tiger Reserve**

   c. Mudumalai Elephant Reserve    d. Vellode Bird Sanctuary

   e. Answer not known

   தமிழ்நாட்டில் "ஆறுகளின் சரணாலயம்" என்று ___________ அழைக்கப்படுகிறது.

   a. கலக்காடு முண்டந்துறை புலிகள் சரணாலயம்

   b. சத்திய மங்கலம் புலிகள் சரணாலயம்

   c. முதுமலை யானைகள் சரணாலயம்

   d. வெள்ளோடு பறவைகள் சரணாலயம்

e. விடை தெரியவில்லை

4. The main cause for Landslides in Nilgiris District is
   a. Drought conditions **b. Heavy rain** c. Inflow of tourists
   d. Smart city project e. Answer not known
   நீலகிரி மாவட்டத்தில் நிலச்சரிவு ஏற்படக் காரணமாக இருப்பது ____________ ஆகும்.
   a. வறட்சியான நிலை b. அதிக மழை c. சுற்றுலாவினர் வருகை
   d. சிறப்பு நகரம் திட்டம் e. விடை தெரியவில்லை

5. If the interest is compounded half yearly find the compound interest for Rs. 5,000 at 20 % p.a. for 1 ½ years.
   a. Rs. 6,655 **b. Rs. 1,655** c. Rs.2,655
   d. Rs. 1,665 e. Answer not known
   கூட்டு வட்டி காண்க.: 1½ ஆண்டுகளுக்கு அசல் ரூ.5,000, 20 %ஆண்டு வட்டி வீதம் அரையாண்டுக்கு ஒரு முறை கணக்கிடப்பட்டுள்ளது.
   a. Rs. 6,655 b. Rs. 1,655 c. Rs.2,655
   d. Rs. 1,665 e. விடை தெரியவில்லை

6. A sum at simple interest of 13½% per annum amounts to Rs. 3,080 in 4 yr. Find the Principal
   **a. Rs.2,000** b. Rs. 1,850 c. Rs.1,650
   d. Rs. 1,550 e. Answer not known
   ஆண்டுக்கு 13½% வீதம் தனி வட்டிக்கு 4 ஆண்டுகளில் கிடைக்கும் மொத்த தொகை ரூ.3,080 எனில் அசலைக் காண்க.
   a. Rs.2,000 b. Rs. 1,850 c. Rs.1,650
   d. Rs. 1,550 e. விடை தெரியவில்லை

7. What is the botanical name of Lemon grass?
   a. Cynodon dactylon b. Setaria italica c. Arundo donax
   **d. Cympopogon citratus** e. Answer not known
   எலுமிச்சை புல்லின் தாவரவியல் பெயர் என்ன?
   a. சயனோடான் டாக்டைலான் b. சீட்டேரியா இட்டாலிக்கா
   c. அருண்டோ டோனாக்ஸ் d. சிம்போபோகான் சிட்ரேட்டஸ்
   e. விடை தெரியவில்லை

8. Bordeaux mixture contains
   **a. $CuSO_4$ +lime** b. $ZnSO_4$ +lime c. $HgCl_2$ +lime
   d. $K_2CO_3$+lime e. Answer not known
   போர்டியாக்ஸ் கலவை என்பது __________ ஆகும்
   a. $CuSO_4$ +சுண்ணாம்பு b. $ZnSO_4$ + சுண்ணாம்பு c. $HgCl_2$ + சுண்ணாம்பு
   d. $K_2CO_3$+ சுண்ணாம்பு e. விடை தெரியவில்லை

9. Which one of the following is not a precautionary measure that we should take before Tsunami?
   a. Find a safe route to nearest shelter
   b. Considering alternative buildings
   c. Having an emergency kit
   **d. Those residing in ground floor should remain there**
   e. Answer not known
   கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் எது சுனாமி வருவதற்கு முன் நாம் மேற்கொள்ள வேண்டிய முன் எச்சரிக்கை நடவடிக்கை இல்லை?
   a. அருகிலுள்ள பாதுகாப்பான தங்குமிடத்திற்கு வழியை கண்டறிதல்
   b. மாற்றுக் கட்டிடத்தை கருத்தில் கொள்ளல்
   c. அவசர முதலுதவிப் பெட்டி வைத்திருத்தல்
   d. தரை தளத்தில் வசிப்பவர்கள் அங்கேயே இருத்தல்
   e. விடை தெரியவில்லை

10. Gilgit tunnel is formed by the action of which of the following rivers?
   a. Ganges **b. Indus** c. Brahmaputra
   d. Narmada e. Answer not known
   கில்கிட் மலைக் குடைவு பின்வரும் நதிகளில் எவற்றின் செயல்களால் உருவாக்கப்பட்டது.
   a. கங்கை b. சிந்து c. பிரம்மபுத்திரா
   d. நர்மதா e. விடை தெரியவில்லை

11. Which Article of Indian constitution says that, "The Supreme Court is bound to give advice to the President of India"?
   **a. Art.143** b. Art 144 c. Art 145
   d. Art.146 e. Answer not known
   "உச்சநீதிமன்றம் இந்திய குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை வழங்க கடமைப்பட்டுள்ளது" இந்திய அரசியலமைப்பின் எந்த ஷரத்து இதனைக் குறிப்பிடுகிறது.?
   a. ஷரத்து 143 b. ஷரத்து 144 c. ஷரத்து 145
   d. ஷரத்து.146 e. விடை தெரியவில்லை

12. The Union List consists of
   **a. 97 Subjects** b.61 Subjects c. 66 Subjects
   d. 70 Subjects e. Answer not known
   மத்தியப் பட்டியல் உள்ளடக்கியது.
   a. 97 இனங்கள் b.61 இனங்கள் c. 66 இனங்கள்
   d. 70 இனங்கள் e. விடை தெரியவில்லை

13. The Act of ___________ introduced separate electorates for Muslims.
   a. 1919 b. 1935 c. 1947 **d. 1909** e. Answer not known
   _____________ ஆண்டு சட்டம் இஸ்லாமியருக்கென தனி பிரதிநிதித்துவத்தை அறிமுகம் செய்தது.
   a. 1919 b. 1935 c. 1947 **d. 1909** e. விடை தெரியவில்லை

14. Wherefrom the Indian National Army started its March towards Delhi in September 1943?

a. at the victory tower of Nepal
**b. at the tomb of Bahadur Shah II**
c. at the ceremonial parade ground
c. at the seashore of Indian ocean
e. Answer not known

செப்டம்பர் 1943 ல் இந்திய தேசிய இராணுவம் எங்கிருந்து தனது டெல்லி அணிவகுப்பை துவங்கியது?

a. நேப்பாளில் உள்ள வெற்றி கோபுரத்தில்
b. இரண்டாம் பகதூர்ஷாவின் கல்லறையின் அருகில்
c. இராணுவத்தின் விசேஷ பயிற்சி மைதானத்திலிருந்து
d. இந்திய பெருங்கடலின் கரையிலிருந்து
e. விடை தெரியவில்லை

15. Pick out correct statement

i. Kural stresses the importance of knowledge and education
ii. Kural stresses the importance of religion
iii. Kural stresses the significance of art and dance
iv. Kural stresses the importance of truth and modesty

a. Both i and ii
b. Both ii and iii
**c. Both i and iv**
d. Both iii and iv
e. Answer not known

சரியானதை தேர்வு செய்க:

i. திருக்குறள் அறிவையும் கல்வியையும் வலியுறுத்துகிறது.
ii. குறள் மதத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.
iii. குறள் கலை மற்றும் நடனத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.
iv. குறள் வாய்மையையும் அடக்கத்தையும் வலியுறுத்துகிறது.

a. i மற்றும் ii ஆகியன
b. ii மற்றும் iii ஆகியன
c. i மற்றும் iv ஆகியன
d. iii மற்றும் iv ஆகியன
e. விடை தெரியவில்லை

16. 13.89 Lakh SHGs were covered with aggregate bank loans of Rs._______ Crore in Tamil Nadu, as on 31st March 2013.

a. Rs. 26,645 Crore
b. Rs. 38,748 Crore
**c. Rs. 18,245 Crore**
d. Rs.17,648 Crore
e. Answer not known

31மார்ச் 2013 ல் தமிழ்நாட்டில் உள்ள 13,89 லட்சம் சுய உதவி குழுக்களுக்கு வழங்கப்பட்ட மொத்த கடன் தொகை ரூ. ___________ கோடியாகும்.

a. ரூ. 26,645 கோடி
b. ரூ. 38,748 கோடி
c. ரூ. 18,245 கோடி
d. ரூ.17,648 கோடி
e. விடை தெரியவில்லை

17. In 2011 – 2014, the total length of railway lines in Tamil Nadu was ____________ Km.

a. 2,671,43 Kms.
**b. 3,761,62 Kms**
c. 4,861,34 Kms
d. 8,963,44 Kms
e. Answer not known

2011-2014 லில் தமிழ்நாட்டின் இருப்பு பாதையின் அளவு ___________ கி.மீட்டராக இருந்தது.

a. 2,671,43 கி.மீ.
b. 3,761,62 கி.மீ.
c. 4,861,34 கி.மீ.
d. 8,963,44 கி.மீ.
e. விடை தெரியவில்லை

18. 6:x::y:15 of the following answers which cannot be the value of x and y respectively.

a. 9,10 b. 3,30 c. 2,45

**d. 10,10** e. Answer not known

6:x::y:15 கீழ் காணும் விடைகளில் எந்த விடை x க்கும் y க்கும் முறையே பொருந்தாது?

a. 9,10 b. 3,30 c. 2,45

d.10,10 e. விடை தெரியவில்லை

19. Selvan saves Rs. 5,000 every 3 months. How many years will it take for him to save Rs. 1,50,000?

a. 90 years **b. 7 ½ years** c. 9 years

d. 30 years e. Answer not known

செல்வன் ரூ.5,000 மூன்று மாதத்திற்கு ஒரு முறை சேமிக்கிறார் எனில் ரூ1,50,000 ஐ சேமிக்க எத்தனை வருடங்களாகும்.?

a. 90 வருடங்கள் b. 7 ½ வருடங்கள் c. 9 வருடங்கள்

d. 30 வருடங்கள் e. விடை தெரியவில்லை

20. _________ stated that the properties of elements are a periodic function of atomic numbers.

a. Rang b. Werner c. Mendeleef

**d. Mosley** e. Answer not known

தனிமங்களின் பண்புகள் மற்றும் செயல்பாடு அதன் அணு எண்ணைப் பொறுத்து இருக்கும் எனக் கூறியவர்.

a. ரேங்க் b. வெர்னர் c. மென்டலீப்

d. மோஸ்லே e. விடை தெரியவில்லை

21. The minimum possible temperature beyond which matter cannot be cooled is

a. -100°C b. 0°C **c. -273 °C** d. -500°C e. Answer not known

ஒரு பொருளை ஒரு குறிப்பிட்ட வெப்பநிலைக்கு கீழ் குளிர்விக்க வைக்க முடியாது. அந்த வெப்பநிலை

a. -100°C b. 0°C **c. -273 °C** d. -500°C e. விடை தெரியவில்லை

22. Which one of the following statement is not correct?

a. K2 is the highest peak in India

b. Jog waterfall is the highest waterfall in India

**c. Cherrapunji is the Wettest Place in India**

d. Deccan Plateau is the largest Plateau in India

e. Answer not known

பின்வருவனவற்றுள், தவறான கூற்று எது?

a. இந்தியாவிலேயே உயரமான சிகரம் K2 ஆகும்.

b. இந்தியாவில் உயரமான நீர்வீழ்ச்சி ஜோக் நீர்வீழ்ச்சி ஆகும்.

c. சிரபுஞ்சி இந்தியாவிலலேயே ஈரமான பகுதியாகும்.

d. இந்தியாவிலேயே மிகப்பெரிய பீடபூமி தக்காண பீடபூமியாகும்.

e. விடை தெரியவில்லை

23. Which is religious leader bound social harmony Jainism and Brahmanism?

a. Appar **b. Hemachandra** c. Ramanujar
d. Sampandar e. Answer not known

எந்த சமயத்தலைவர் சமணத்திற்கும், பிராமணியத்திற்கும் சமூக இணக்கத்தினை உருவாக்கினார்?

a. அப்பர் b. ஹேமச்சந்திரா c. இராமானுஜர்
d. சம்பந்தர் e. விடை தெரியவில்லை

24. The Prime Minister of India is appointed by

a. The Governor b. The Speaker **c. The President**
d. The Election commissioner e. Answer not known

இந்தியப் பிரதமரை நியமனம் செய்பவர்

a. ஆளுநர் b. சபாநாயகர் c. குடியரசுத் தலைவர்
d. தேர்தல் ஆணையர் e. விடை தெரியவில்லை

25. Which of the following countries is the first ever to incorporate the directive Principles of State Policy as part of their constitution?

a. Ireland b. America c.India
**d. Spain** e. Answer not known

அரசு நெறிமுறை கோட்பாட்டினை பின்வரும் நாடுகளில் எது முதன்முதலில் தங்கள் அரசியலமைப்பில் சேர்த்துக் கொண்டது?

a. அயர்லாந்து b. அமெரிக்கா c.இந்தியா
d. ஸ்பெயின் e. விடை தெரியவில்லை

26. Who was the Founder and Editor of the Journals Punjabee, the Bande Mataram and the English weekly, The people?

**a. lala Lajpat Rai** b. C.R. Dass c. B.G.Tilak
d. B.C.Pal e. Answer not known

பஞ்சாபி, வந்தே மாதரம் என்ற இதழ்களையும், மக்கள் என்ற ஆங்கில வார இதழையம் நிறுவியவரும் அதன் பதிப்பாசிரியராகவும் இருந்தவர் யார்?

a. லாலா லஜ்பத் ராய் b. சி.ஆர்.தாஸ் c. பி.ஜி.திலக்
d. பி.சி.பால் e. விடை தெரியவில்லை

27. Which company helped Gandhi to do his legal practice in south Africa?

**a. Dada Abdulla company** b. Tata and Birla Company
c. Malabar Tea Company d. Surath Textile Company
e. Answer not known

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் தனது வழக்குரைஞர் தொழில் துவங்க உதவிய வியாபார நிறுவனம் எது?

a. தாதா அப்துல்லா நிறுவனம் b. டாட்டா மற்றும் பிர்லா நிறுவனம்
c. மலபார் தேயிலை நிறுவனம் d. சூரத் ஜவுளி நிறுவனம் e. விடை தெரியவில்லை

28. Tilak of South India was

a. Vanchinathan b. subrahmaniasiva c. Rajaji

**d. V.O.Chidambaranar** e. Answer not known

'தென்னாட்டுத்திலகர்' என அழைக்கப்பட்டவர் ____________ ஆவார்.

a. வாஞ்சிநாதன் b. சுப்ரமணிய சிவா c. இராஜாஜி

d. வ.உ.சிதம்பரனார் e. விடை தெரியவில்லை

29. The name of the Justice Party was previously called

a. South Indian Youth Federation

**b. South Indian Liberal Association**

c. South Indian Press Reporters Association

d. South Indian Literate Federation

e. Answer not known

முதன் முதலில் நீதிக்கட்சி ________________ என்ற பெயரில் அழைக்கப்பட்டது.

a. தென்னிந்திய இளைஞர் சங்கம்

b. தென்னிந்திய நல உரிமை சங்கம்

c. தென்னிந்திய பத்திரிக்கை நிருபர்கள் சங்கம்

d. தென்னிந்திய இலக்கிய ஐக்கிய மன்றம்

e. விடை தெரியவில்லை

30. Next term in $\frac{1}{2}, \frac{3}{5}, \frac{5}{10}, \frac{7}{17}, \ldots$ is

a. $\frac{10}{27}$ **b.** $\frac{9}{26}$ c. $\frac{9}{28}$ d. $\frac{11}{26}$ e. Answer not known

$\frac{1}{2}, \frac{3}{5}, \frac{5}{10}, \frac{7}{17}, \ldots$ல் அடுத்த உறுப்பு

a. $\frac{10}{27}$ b. $\frac{9}{26}$ c. $\frac{9}{28}$ d. $\frac{11}{26}$ e. விடை தெரியவில்லை

31. 7x5x3x2+3 is a prime or composite number or integer?

a. composite number **b. Prime number** c. Whole number

d. Integer e. Answer not known

7x5x3x2+3 என்பது ஒரு பகு எண்ணா? பகா எண்ணா? ஒரு முழுவா?

a. பகு எண் b. பகா எண் c. முழு எண்

d. முழுக்கள் e. விடை தெரியவில்லை

32. Out of 50 students in a class, 30 are boys, then the ratio of number of boys to number of girls

a. 2 : 3 b. 2 : 5 c. 5 : 3 **d. 3 : 2** e. Answer not known

ஒரு வகுப்பில் உள்ள 50 மாணவர்களில் 30 பேர் மாணவர்கள் எனில் மாணவர் மற்றும் மாணவிகளுக்கு இடையேயான விகிதம்.

a. 2 : 3 b. 2 : 5 c. 5 : 3 d. 3 : 2 e. விடை தெரியவில்லை

33. Given that *HCF (X,Y)* =4 and *LCM (X,Y)* = 9696, if *X*=96, Find *Y*

a. 101 **b. 404** c.9212 d. 24 e. Answer not known

*X,Y* என்ற இரு எண்களின் மீ.பொ.வ. *(X,Y)* =4 மற்றும் மீ.பொ.ம. *(X,Y)* =9696, *X*= *96* எனில், *Y* ன் மதிப்பை காண்க.

a. 101 b. 404 c.9212 d. 24 e. விடை தெரியவில்லை

34. The force of attraction between two charges at distance 'd' is 'F'. What distance apart should these charges be kept in the same medium, so that the force becomes 16 F?

a. $\frac{d}{2}$ **b.** $\frac{d}{4}$ c. $\frac{d}{\sqrt{3}}$ d. $\frac{d}{\sqrt{2}}$ e. Answer not known

இரண்டு மின்னூட்டங்களின் இடைப்பட்ட இடப்பெயர்ச்சி 'd' ஆக இருக்கும்போது கவர்ச்சி விசை 'F'ஆக உள்ளது. கவர்ச்சி விசை 16 F ஆக மாற, இடப்பெயர்ச்சி என்ன?

a. $\frac{d}{2}$ b. $\frac{d}{4}$ c. $\frac{d}{\sqrt{3}}$ d. $\frac{d}{\sqrt{2}}$ e. விடை தெரியவில்லை

35. The French Drama, "Happening" (1960) about illegal abortion won the Golden Lion Award for the Best Film at ___________ Film Festival.

a. Paris **b. Venice** c. Geneva

d. Vienna e. Answer not known

ஹப்பனிங், (1960) சட்ட விரோத கருக்கலைப்புப் பற்றிய பிரெஞ்சு நாடகம், சிறந்த திரைப்படத்திற்கான 'கோல்டன் லயன் விருது' ___________ திரைப்பட விழாவில் வழங்கப்பட்டது.

a. பாரிஸ் b. வெனிஸ் c. ஜெனிவா

d. வியன்னா e. விடை தெரியவில்லை

36. Kharosthi script derived from the

a. Brahmi b. Semitic c. Roman

**d. Aramaic** e. Answer not known

சுரோஷ்தி எழுத்து வடிவம் எதில் இருந்து உருவானது

a. பிரம்மி b. செமிட்டிக் c. ரோமன்

d. அராமிக் e. விடை தெரியவில்லை

37. When did Malayalam Became the separate language?

a. $6^{th}$ Century **b. $11^{th}$ Century** c. $12^{th}$ Century

d. $9^{th}$ Century e. Answer not known

எப்போது மலையாளம் தனி மொழியாக மாறியது?

a. 6ஆம் நூற்றாண்டு b. 11 ஆம் நூற்றாண்டு c. 12ஆம் நூற்றாண்டு

d. 9ஆம் நூற்றாண்டு e. விடை தெரியவில்லை

38. The time taken for the Constituent Assembly to finalize the Constitution of India

**a. 2 Years, 11 months, 18 days** b. 2 Years, 9 months, 8 days

c. 2 years, 7 months, 18 days d. 2 years, 5 months, 20 days

e. Answer not known

இந்திய அரசியலமைப்பை உருவாக்க வரைவுக்குழு எடுத்துக்கொண்ட காலம்

a. 2 ஆண்டுகள், 11 மாதம், 18 நாள் b. 2 ஆண்டுகள், 9 மாதம், 8 நாள்

c. 2 ஆண்டுகள், 7 மாதம், 18 நாள் d. 2 ஆண்டுகள், 5 மாதம், 20 நாள்

e. விடை தெரியவில்லை

39. Who was the Chairman of the Drafting Committee of Indian Constitution?

**a. Dr. B.R. Ambedkar** b. Rajendra Prasad c. Jawaharlal Nehru

d. None of the above e. Answer not known

இந்திய அரசியலமைப்பு வரைவுக் குழுவின் தலைவர் யார்?

a. டாக்டர். B.R. அம்பேத்கார் b. இராஜேந்திர பிரசாத் c. ஜவஹர்லால் நேரு

d. மேற்கூறியவற்றுள் எவருமில்லை e. விடை தெரியவில்லை

40. Who is popularly called as the Prophet from the South?

a. Rajaji b. V.O. Chidambaram **c. Periyar E.V.Ramasamy**

d. Bharathiar e. Answer not known

'தெற்கிலிருந்து வந்த தீர்க்கதரிசி' என்று சிறப்பாக அழைக்கப்பட்டவர் யார்?

a. இராஜாஜி b. வ.உ.சிதம்பரம் c. பெரியார் ஈ.வெ.இராமசாமி

d. பாரதியார் e. விடை தெரியவில்லை

41. Which act was passed abrogating the right of free speech and criticism?

a. The Criminal Law b. National Act of 1908 **c. Indian Press Act of 1910**

d. Press Act of 1906 e. Answer not known

பேச்சுரிமையும், கருத்துரிமையையும் பறிப்பதற்காகவே நிறைவேற்றப்பட்ட சட்டம் எது?

a. கிரிமினல் சட்டம் b.1908 ஆம் ஆண்டு தேசிய சட்டம்

c. 1910 ஆம் ஆண்டு இந்திய பத்திரிக்கை சட்டம் d.1906 ஆம் ஆண்டு பத்திரிக்கை சட்டம்

e. விடை தெரியவில்லை

42. Varunan was the God of

a. People of Kurinji b. People of Mullai **c. People of Neidal**

d. People of Marutham e. Answer not known

வருணன் என்ற கடவுளை வணங்கியவர்கள்

a. குறிஞ்சி நில மக்கள் b. முல்லை நில மக்கள் c. நெய்தல் நில மக்கள்

d. மருதம் நில மக்கள் e. விடை தெரியவில்லை

43. Name the first lady arrested in connection with Salt Satyagraha and the President of the Tamil Nadu Provincial congress Committee.

a. Sarojini **b. Rukmani Lakshmipathy** c. Ambujammal

d. Parvathi Devi e. Answer not known

தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் மற்றும் உப்பு சத்தியாகிரகத்தையும் எடுத்து நடத்தி கைது செய்யப்பட்ட முதல் பெண்மணி பெயரைக் குறிப்பிடுக.

a. சரோஜினி b. ருக்மணி லஷ்மிபதி c. அம்புஜம்மாள்

d. பார்வதி தேவி e. விடை தெரியவில்லை

44. Given $F_1=1$, $F_2=3$ and $F_n=F_{n-1}+F_{n-2}$ then $F_5$ is

a. 3 b. 5 c. 8 **d. 11** e. Answer not known

$F_1=1$, $F_2=3$ மற்றும் $F_n=F_{n-1}+F_{n-2}$ எனில் $F_5$ ஆனது

a. 3 b. 5 c. 8 d. 11 e. விடை தெரியவில்லை

45. Two dice are numbered 1,2,3,4,5,6 and 1,1,2,2,3,3 respectively. They are rolled and the sum of the numbers on them is noted. Find the probability of getting sum 4.

a. $\frac{3}{36}$ b. $\frac{4}{36}$ c. $\frac{5}{36}$ **d.** $\frac{6}{36}$ e. Answer not known

இரண்டு பகடைகளில் ஒன்றில் 1,2,3,4,5,6 என்றும் மற்றொரு பகடையில் 1,1,2,2,3,3 என்றும் முக மதிப்புகள் குறிக்கப்பட்டுள்ளன. அவை இரண்டும் உருட்டப்படும் போது கிடைக்கும் முக மதிப்புகளின் கூடுதல் 4 கிடைப்பதற்கான நிகழ்தகவை காண்.

a. $\frac{3}{36}$ b. $\frac{4}{36}$ c. $\frac{5}{36}$ d. $\frac{6}{36}$ e. விடை தெரியவில்லை

ே

46. If the H.C.F. of two numbers is 1 then the numbers are called

**a. Co prime numbers** b. Prime numbers c. Even integers

d. Odd integers e. Answer not known

இரு எண்களின் மீ.பொ.வ. மதிப்பு 1 எனில் அவ்விரு எண்களை அழைக்கும் முறை

a. சார்பகா எண்கள் b. பகா எண்கள் c. இரட்டை எண்கள்

d. ஒற்றை எண்கள் e. விடை தெரியவில்லை

47. The ratio of the cost price and the selling price is 4 : 5. The profit percent

a. 10% b.20 % **c. 25%** d. 30 % e. Answer not known

ஒரு பொருளின் வாங்கிய விலை மற்றும் விற்ற விலை 4 : 5 என்ற விகிதத்தில் உள்ளன. எனில் இலாப சதவீதம் காண்க.

a. 10% b.20 % c. 25% d. 30 % e. விடை தெரியவில்லை

48. The motto of "Satyameva Jayate" "Truth alone Triumphs" was written in __________ script.

a. Kharosthi b. Brahmi **c. Devanagiri**

d. Aramaic e. Answer not known

'சத்யமேவ ஜெயதே' என்ற 'வாய்மையே வெல்லும்' ------------------- எழுத்து வடிவில் எழுதப்பட்டுள்ளது.

a. கரோஷ்தி b. பிராமி c. தேவநாகிரி

d. அரெமிக் e. விடை தெரியவில்லை

49. The Sahitya Academy has recognized ______ Indian Languages.

a. 13 b. 15 c. 17 **d. 24** e. Answer not known

சாகித்ய அகாடமி _____________ இந்திய மொழிகளை அங்கீகரித்துள்ளது.

a. 13 b. 15 c. 17 d. 24 e. விடை தெரியவில்லை

50. The term 'aima'mean

a. Prostration to the Emperor  b. Kissing the Ground  c. Four Salutations
**d. Lands donated to the purpose of prayer to God**  e. Answer not known

'அய்மா' என்ற சொல் எதை குறிக்கின்றது?

a. மன்னர் முன் மண்டியிடுதல்  b. நிலத்தில் முத்தமிடுதல்
c. நான்கு வணக்கங்கள்  d. கடவுள் வழிபாட்டுக்கு ஒதுக்கப்படும் நிலம்
e. விடை தெரியவில்லை

51. Nicolo Conti and Abdur Razzaq visited India during the reign of

a. Cholas  b. Pandyas  **c. Vijayanagar rulers**
d. Bahmani Sultans  e. Answer not known

இந்தியாவில், நிக்கோலா காண்டி மற்றும் அப்துர் ரஸாக் ____________ ஆட்சியின் போது வருகைபுரிந்தனர்.

a. சோழர்கள்  b. பாண்டியர்கள்  c. விஜயநகர் அரசர்கள்
d. பாமினி சுல்தான்கள்  e. விடை தெரியவில்லை

52. Match the List I with List II and select the correct answer using the codes given below:

According to 2011 census, the literacy levels in the states are

| List I<br>State | List II<br>Literacy level(%) |
|---|---|
| A. Kerala | 1. 93.99% |
| B. Tamil Nadu | 2. 75.36% |
| C. Karnataka | 3. 67.02% |
| D. Andhra Pradesh | 4.80.09% |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| **b.** | **1** | **4** | **2** | **3** |
| c. | 1 | 2 | 4 | 3 |
| d. | 1 | 3 | 2 | 4 |

e. Answer not known

பட்டியல் I மற்றும் பட்டியல் II ஐ பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான விடையைத் தேர்வு செய்க:

2011 மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி படித்தவர் அதிகமான சதவிகிதத்தில் உள்ள மாநிலங்களை வரிசைப்படுத்து.

| பட்டியல் I<br>மாநிலம் | பட்டியல் II<br>எழுத்தறிவு வீதம்(%) |
|---|---|
| A கேரளா | 1) 93.99% |
| B தமிழ்நாடு | 2) 75.36% |
| C கர்நாடகா | 3) 67.02% |
| D ஆந்திர பிரதேசம் | 4) 80.09% |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |

| | | | | |
|---|---|---|---|---|
| b. | 1 | 4 | 2 | 3 |
| c | 1 | 2 | 4 | 3 |
| d | 1 | 3 | 2 | 4 |

e. விடை தெரியவில்லை

53. Who told this statement that "The Revolt of 1857 was a conflict between civilization and barbarism"?

**a. T.R. Holmes** b. Sir James c. Sir Seeley
d. Sir Lawrence e. Answer not known

'1857 ஆம் ஆண்டு புரட்சி நாகரீகத்திற்கும் அநாகரீகத்திற்கும் இடையே ஆன மோதல்' என்ற கருத்தை கூறியவர் யார்?

a. டி.ஆர். ஹோம்ஸ் b. சர். ஜேம்ஸ் c. சர்.சீலி
d. சர். லாரன்ஸ் e. விடை தெரியவில்லை

54. In 1917, Annie Besant was the President of Indian National congress. She presided over ________ session.

a. Bombay **b. Calcutta** c.Surat
d.Lucknow e. Answer not known

1917 ல் இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக அன்னிபெசண்ட் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் ______________ கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

a. பம்பாய் b. கல்கத்தா c. சூரத்
d. லக்னோ e. விடை தெரியவில்லை

55. Pick out correct answer

| | | |
|---|---|---|
| i. | Madras Mahajana Sabha | - 1884 |
| ii. | South Indian People Association | - 1919 |
| iii. | Non- Brahmin manifesto | - 1916 |
| iv. | Madras Literary Society | -1830 |

a. ii only correct b. iv only correct c. ii and iv are correct
**d. ii and iii are correct** e. Answer not known

சரியான விடையைத் தேர்ந்தெடு

| | | |
|---|---|---|
| i. | மதராஸ் மகாஜனசபா | - 1884 |
| ii. | தென் இந்திய மக்கள் சங்கம் | - 1919 |
| iii. | பிராமணரல்லாதோர் பிரகடனம் | - 1916 |
| iv. | மதராஸ் இலக்கிய சங்கம் | - 1830 |

a. ii மட்டும் சரி b. iv மட்டும் சரி c. ii மற்றும் iv சரி
d. ii மற்றும் iii சரி e. விடை தெரியவில்லை

56. How many great circles can a sphere have?

a. Two b. Three c. Ten
**d. Infinitely many** e. Answer not known

ஒரு கோளத்தில் எத்தனை மீப்பெரு வட்டங்கள் உள்ளன.?

a. இரண்டு b. மூன்று c. பத்து

d. எண்ணிலடங்கா e. விடை தெரியவில்லை

57. In a certain code "MEDICINE" is coded as "EOJDJEFM", then how is "COMPUTER" written in the same code?
a. CMNQTUDR b. CNPRVUFQ **c. RNVFTUDQ**
d. RFUVQNPC e. Answer not known
ஒரு குறிப்பிட்ட குறியீடு மொழியில் 'MEDICINE' என்ற வார்த்தை 'EOJDJEFM' என மாற்றிக் குறியீடுச் செய்யப்பட்டுள்ளது எனில் 'COMPUTER' என்ற வார்த்தைக்கான குறியீடு எது எனக் காண்க:
a. CMNQTUDR b. CNPRVUFQ c. RNVFTUDQ
d. RFUVQNPC e. விடை தெரியவில்லை

58. Cost of dress increases from Rs.2,100 to Rs. 2,520. Percentage increase in price is
a. 15 b. 18 **c. 20** d. 25 e. Answer not known
ஒரு ஆடையின் விலை ரூ. 2,100 லிருந்து ரூ.2,520 ஆக அதிகரித்தால், அதிகரிப்பு சதவீதம்
a. 15 b. 18 c. 20 d. 25 e. விடை தெரியவில்லை

59. If $16\frac{2}{3}$ % of a number is 40 then the number is
a. 220 **b. 240** c.420 d. 520 e. Answer not known
ஒரு எண்ணில் $16\frac{2}{3}$ % என்பது 40 எனில் அந்த எண் யாது?
a. 220 b. 240 c.420 d. 520 e. விடை தெரியவில்லை

60. In Tamil Nadu, 'Social Justice Day' is observed on
a. 17th October b. 18th November **c. 17th September**
d. 18th August e. Answer not known
தமிழகத்தில் 'சமூக நீதி நாள்' அனுசரிக்கப்படும் தினம்
a. அக்டோபர் 17 b. நவம்பர் 18 c. செப்டம்பர் 17
d. ஆகஸ்டு 18 e. விடை தெரியவில்லை

61. Which of the following is the newly identified butterfly species in Dzongu of North Sikkim during December 2021?
**a. Chocolate bordered Flutter Butterfly** b. Common Lime Butterfly
c. Blue Pancy Butterfly d. Spot Swordtail Butterfly
e. Answer not known
இவற்றுள் எது வட சிக்கிம் மாநிலத்திலுள்ள டிசோங்கு எனும் இடத்தில் டிசம்பர் 2021 மாதத்தில் கண்டறியப்பட்ட பட்டாம்பூச்சி இனம்
a. சாக்லேட் ஓர இறக்கை பட்டாம்பூச்சி b. எலுமிச்சை அழகி பட்டாம்பூச்சி
c. நீல வசீகரன் பட்டாம்பூச்சி d. கத்திவால் அழகி பட்டாம்பூச்சி
e. விடை தெரியவில்லை

62. Which one of the following was not correct about the most well known musician of Akbar's Court?

a. Tansen b. Sur Dass c. Ram Dass

**d. Tarachand** e. Answer not known

கீழ்கண்டவற்றுள் அக்பரது மிகச்சிறந்த இசைப்பாடகர் பற்றிய தவறான ஒன்று எது?

a. தான்சென் b. சூர்தாஸ் c. இராம்தாஸ்

d. தாராசந்த் e. விடை தெரியவில்லை

63. The first architectural construction made by Qutb -ud-Din-Aibak was the

a. Qutb Minar b. Arhai-Din-Ka-Jhompra

**c. Quwwat-ul-Islam mosque** d. Jamaat Khana Masjid

e. Answer not known

குத்புதின் ஐபக்கால் முதலில் உருவாக்கப்பட்ட கட்டிடமானது ______________ ஆகும்.

a. குதுப்மினார் b.அர்காய்-டின்-கா-ஜோம்ரா

c. குவாத் உல் இஸ்லாம் மசூதி d. ஜமாத் கானா மஸ்ஜித்

e. விடை தெரியவில்லை

64. In the production process, which cost cannot be retrieved?

a. Real cost b. Opportunity cost **c. Sunk cost**

d. Implicit cost e. Answer not known

உற்பத்தி செய்யும் போது எந்த செலவை திரும்ப பெற முடியாது?

a. உண்மை செலவு b. பிற வாய்ப்பு செலவு c. மூழ்கும் செலவு

d. உள்ளார்ந்த செலவு e. விடை தெரியவில்லை

65. Find out which pair is not correct?

a. RBI - Banker's Bank

**b. FCI - Financial Assistance to Commercial Institutions**

c. IDBI – Industrial Finance

d. EXIM Bank – Financing for Export and Import

e. Answer not known

எந்த ஜோடி ததவறானது என கண்டுபிடிக்க

a. RBI -வங்கிகளின் வங்கி

b. FCI –வணிக நிறுவனங்களுக்கு நிதி உதவி

c. IDBI –தொழில் நிதி

d. EXIM வங்கி – ஏற்றுமதி இறக்குமதி நிதி உதவி

e. விடை தெரியவில்லை

66. During the Sangam period the Agricultural area was called as

a. Kurinji b. Mullai **c. Marudam**

d. Neidal e. Answer not known

சங்க காலத்தில் விவசாய நிலங்களை உள்ளிட்ட நிலப்பரப்பு ________ என அழைக்கப்பட்டது.

a. குறிஞ்சி b. முல்லை c. மருதம்

d. நெய்தல் e. விடை தெரியவில்லை

67. Pallavan Kovil plates explains about

a. Svetambara Jaina order **b. Digambara jaina order**
c. Buddhist principles d. Geneology of the Pallavas
e. Answer not known

பல்லவன் கோவில் தகடுகள் எதைப் பற்றி கூறுகின்றன?

a.சுவேதம்பரா சமண வரிசை b. திகம்பரா சமண வரிசை c. புத்த கொள்கைகள்
d.பல்லவ அரசர்களின் மரபு வரிசை e. விடை தெரியவில்லை

68. ____________ district was the highest multi-dimensional poverty index, according to TN Human Development Report ( 2013-14)

a. Kancheepuram b. Chennai c. Coimbatore
**d. Dharmapuri** e. Answer not known

தமிழ்நாடு மனித மேம்பாட்டு அறிக்கை 2013-14 ஆம் ஆண்டின்படி, பன்முக பரிமான வறுமை குறியீடு _____________ மாவட்டத்தில் முதன்மை அதிக குறியீடு பெற்று விளங்குகிறது.

a. காஞ்சிபுரம் b. சென்னை c. கோயம்புத்தூர்
d. தர்மபுரி e. விடை தெரியவில்லை

69. _____________ private sector industry received Tamil Nadu Government Award for providing maximum job opportunities to differently abled persons during 2019.

a. Sakthi Masala Pvt Ltd, Erode **b. Everest Stabilisers (p) Ltd,Chennai**
c. SKM Animal – Feeds Ltd, Erode d. Vedanta Sterlite Industry, Thoothukudi
e. Answer not known

2019-ல் அதிகமான உடல் ஊனமுற்றோரை பணிக்கு அமர்த்தியமைக்கு தமிழ்நாடு அரசு விருது யாருக்கு கொடுக்கப்பட்டது.?

a. சக்தி மசாலா (த) நிறுவனம், ஈரோடு
b. எவரெஸ்ட் ஸ்டெபிலைஸர் (த) லிட். சென்னை
c. எஸ்.கே.எம். அனிமல் - பீட்ஸ் நிறுவனம், ஈரோடு
d. வேதாந்தா ஸ்டெர்லைட் தொழில், தூத்துக்குடி
e. விடை தெரியவில்லை

70. A works 3 times as fast as B and is able to complete a task in 24 days less than the days taken by B. Find the time in which they can complete the work together.

a. 36 days b. 27 days c. 18 days **d. 9 days** e. Answer not known

A ஆனவர் B ஐ காட்டிலும் 3 மடங்கு வேகமாக ஒரு வேலையை செய்து முடிப்பார். அவரால் அந்தப் பணியை B எடுத்துக் கொண்ட நேரத்தை விட 24 நாள்கள் குறைவாக எடுத்து முடிக்க முடிகிறது. இருவரும் சேர்ந்து அந்த வேலையை முடிக்க ஆகும் நேரத்தைக் காண்க.

a. 36 நாட்கள் b. 27 நாட்கள் c. 18 நாட்கள் d. 9 நாட்கள் e. விடை தெரியவில்லை

71. Perimeter of a triangular plot is 60 m. Find the area of the plot if the sides are in the ratio 5 : 12 : 13

a. 130 $m^2$ **b. 120 $m^2$** c. 110 $m^2$ d.100 $m^2$ e. Answer not known

முக்கோண வடிவிலான மனையின் சுற்றளவு 60 மீ. ஆதன் பக்கங்கள் 5:12:13 என்ற விகிதத்தில் உள்ளன எனில் அந்த மனையின் பரப்பளவைக் காண்க.

a. 130 மீ$^2$ b. 120 மீ$^2$ c. 110 மீ$^2$ d.100 மீ$^2$ e. விடை தெரியவில்லை

72. A family went to a hotel and spent Rs. 350 for the food and paid 5% GST extra. Calculate the CGST and SGST.

a. Rs. 87.5, Rs. 85.7 **b. Rs. 8.75, Rs. 8.75** c. Rs. 85.7, Rs. 87.5

d. Rs. 7.85, Rs. 7.85 e. Answer not known

ஒரு குடும்பம் உணவகத்திற்குச் சென்று உணவுக்காக ரூ.350 செலவு செய்து கூடுதலாகச் சரக்கு மற்றும் சேவை வரியாக 5% செலுத்தினார்கள் எனில் மத்திய மற்றும் மாநில சரக்கு சேவை வரியைக் கணக்கிடுக.

a. ரூ. 87.5, ரூ. 85.7 b. ரூ. 8.75, ரூ. 8.75 c. ரூ. 85.7, ரூ. 87.5

d. ரூ. 7.85, ரூ. 7.85 e. விடை தெரியவில்லை

73. In an examination 35 % of the students passed and 455 failed. How many students appeared for the Examination?

a. 490 **b. 700** c. 845 d. 1300 e. Answer not known

ஒரு தேர்வில் உள்ள மொத்த மாணவர்களில் 35 % பேர் தேர்ச்சி பெற்றவர்கள், மேலும் 455 பேர் தேர்ச்சி பெறாதவர்கள் எனில் தேர்வு எழுதிய மாணவர்களின் எண்ணிக்கை

a. 490 b. 700 c. 845 d. 1300 e. விடை தெரியவில்லை

74. The name of the first super computer assembled indigenously under national super computing mission.

a. Param Agni **b. Param Shivay** c. Param Vidwan

d. Param Swayam e. Answer not known

சூப்பர் கணித முறை மிஷன் படி உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட சூப்பர் கணினியின் பெயர் என்ன?

a. பரம் அக்னி b. பரம் சிவே c. பரம் வித்வான்

d. பரம் ஸ்வயம் e. விடை தெரியவில்லை

75. Which organization launched the school education quality index?

a. NGO Pratham **b. NITI Aayog** c. HRD ministry

d. None of the above e. Answer not known

பள்ளிக் கல்வித் தரக் குறியீட்டை அறிமுகப்படுத்திய அமைப்பு எது?

a. NGO பிரதம் b. NITI ஆயோக் c. மனித வள மேம்பாட்டு அமைச்சகம்

d. மேற்கூறியவை எதுவும் இல்லை e. விடை தெரியவில்லை

76. Which one of the statement is correct regarding the Indus Valley Civilization?

1. There was a strong centralized Government
2. Each lane had a lamp post at cutervels
3. Dust-bin were also provided in the streets
4. Quarters of rich and poor were found

a. 1.2 is correct 3,4 are incorrect b. 1,3 is correct 2,4 are incorrect

c. 1,2,3 are correct 4 is incorrect **d. All are correct** e. Answer not known

சிந்து சமவெளி நாகரிகத்தை பற்றிய கூற்றுகளில் சரியானது எது?
1. வலுவான மத்திய அரசு
2. ஒவ்வொரு தெருவிலும் தெரு விளக்குகள்
3. தெருக்களில் குப்பை தொட்டி அமைந்திருந்தது.
4. பணக்காரர் மற்றும் ஏழைகளுக்கான குடியிருப்புகள் காணப்படுகிறது.

a. 1.2 மட்டும் சரி 3,4 தவறானது. b. 1,3 மட்டும் சரி 2,4 தவறானது.
c. 1,2,3 மட்டும் சரி 4 மட்டும் தவறானது. d.அனைத்தும் சரியானது e. விடை தெரியவில்லை

77. Target of Rs.1,05,000 Crore of disinvestment receipts is set for the financial year

a. 2017-2018 b. 2018-2019 **c. 2019-2020**
d. 2020-2021 e. Answer not known

முதலீட்டுக்கலைப்பு வரவினங்களுக்கு ______________ நிதியாண்டில் ரூ. 1,05,000 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

a. 2017-2018 b. 2018-2019 c. 2019-2020
d. 2020-2021 e. விடை தெரியவில்லை

78. The model adopted in the second five year plan was

a. Harod-Domar Model b. Kaldor model c. Meade's model
**d. Mahalanobis model** e. Answer not known

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் உருவாக்கப்பட்ட மாதிரி

a. ஹராடு – டோமார் மாதிரி b. கால்டார் மாதிரி c. மீட் மாதிரி
d. மஹலநோபிஸ் மாதிரி e. விடை தெரியவில்லை

79. The Longest poem of Madurai – Kanchi more than 700 lines wrote by

a. Nakeerar b. Paranjothi c. Ilango Adigal
**d. Mangudi Maruthanar** e. Answer not known

700 வரிகளுக்கு மேல் கொண்ட பாடலான மதுரைக் காஞ்சி என்ற நூலை எழுதியவர்

a. நக்கீரர் b. பரஞ்ஜோதி c. இளங்கோ அடிகள்
d. மாங்குடி மருதனார் e. விடை தெரியவில்லை

80. The character of the courageous mother in the battle field in Sangam Literature is praised

a. Poigaiyar **b. Okkur Masathiyar** c. Palai Gowthamanar
d. Panamparanar e. Answer not known

சங்க இலக்கியத்தில் போர்க்களத்தினைக் கண்ட வீரத்தாயின் நிலையை போற்றியவர்

a. பொய்கையார் b. ஒக்கூர் மாசாத்தியர் c. பாலைக் கௌதமனார்
d. பனம்பரனார் e. விடை தெரியவில்லை

81. _________ is the Premier State in human organ donation

a. Uttar Pradesh b. Orisha **c. Tamil Nadu**
d. Kerala e. Answer not known

உடல் உறுப்பு தானத்தில் முதன்மையான மாநிலமாக இருப்பது எது?

a. உத்திர பிரதேசம் b. ஒரிசா c. தமிழ்நாடு
d. கேரளா e. விடை தெரியவில்லை

82. The initiatives of e-Governance of Tamil Nadu is

i. Enterprise wide architecture
ii. Rules, Policies, standards
iii. Training and HRD
iv. Buffer stock operation

a. i only b. ii only **c. i, ii and iii**
d. ii and iv only e. Answer not known

பின்வருவனவற்றுள் தமிழ்நாடு மின்- ஆளுமை முகமையின் செயல்பாடு ____________ ஆகும்.

i. நிறுவனம் சார்ந்த கட்டிடக்கலை
ii. விதிமுறைகள், கொள்கைகள், தரப்படுத்துதல்கள்
iii. பயிற்சி மற்றும் மனிதவள மேம்பாடு
iv. உபரி இருப்புக் கொள்கை

a. i மட்டும் b. ii மட்டும் c. i, ii மற்றும் iii
d. ii மற்றும் iv மட்டும் e. விடை தெரியவில்லை

83. The length, breadth and height of a cuboid are in the ratio 7 :5 :2. Its volume is 35840 $cm^3$ then height is

a. 8 cm **b. 16 cm** c. 24 cm d. 32 cm e. Answer not known

ஒரு கனச் செவ்வகத்தின் நீளம், அகலம் மற்றும் உயரத்தின் விகிதம் 7:5:2 மற்றும் கன அளவு 35840 செ.மீ $^3$ எனில் உயரத்தின் அளவு.

a. 8 செ.மீ. b. 16 செ.மீ. c. 24 செ.மீ. d. 32 செ.மீ. e. விடை தெரியவில்லை

84. The volume of a solid right circular cone is 4928 cu. Cm. If its height is 24 cm, then find the radius of the cone $\left[\pi = \frac{22}{7}\right]$

**a. 14 cm** b. 15 cm c. 16 cm d. 17 cm e. Answer not known

ஒரு திண்ம நேர்வட்டக் கூம்பின் கன அளவு 4928 க.செ.மீ. மற்றும் அதன் உயரம் 24 செ.மீ. எனில் அக்கூம்பின் ஆரத்தைக் காண்க $\left[\pi = \frac{22}{7}\right]$

a. 14 செ.மீ. b. 15 செ.மீ. c. 16 செ.மீ. d. 17 செ.மீ. e. விடை தெரியவில்லை

85. Write 0.07% as a fraction

a. $\frac{7}{10}$ **b.** $\frac{7}{10000}$ c. $\frac{7}{100}$ d. $\frac{7}{1000}$ e. Answer not known

0.07% ஐ பின்னமாக மாற்றுக்

a. $\frac{7}{10}$ b. $\frac{7}{10000}$ c. $\frac{7}{100}$ d. $\frac{7}{1000}$ e. விடை தெரியவில்லை

86. Acidity if any in the urethra after passage of urine is neutralized by the secretion of

a. Prostate Gland b. Perinaeal Gland c. Rectal Gland
**d. Cowper's Gland** e. Answer not known

சிறுநீர் கழித்த பின் சிறுநீர்குழாயில் ஏற்படும் அமிலத்தன்மையை நடுநிலைப்படுத்தும் சுரப்பு - ______________ ஆல் சுரக்கப்படுகிறது.

a. புரோஸ்டேட் சுரப்பி b. பெரினியல் சுரப்பி c. மலக்குடல் சுரப்பி
d. கௌபர்ஸ் சுரப்பி e. விடை தெரியவில்லை

87. The highest percentage of scheduled tribe population is found in the state/union territory.

**a. Lakshadweep** b. Meghalaya c. Mizoram
d. Nagaland e. Answer not known

பட்டியல் பழங்குடியின மக்கள் அதிக சதவீதத்தில் காணப்படும் மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

a. லட்சத்தீவுகள் b. மேகாலயா c. மிசோரம்
d. நாகாலாந்து e. விடை தெரியவில்லை

88. The Durgabai Deshmuk Award for women Development is given to which of the following organisations?

a. Women Development Organisation **b. Voluntary organisations**
c. Central Social Welfare Board d. State Social Welfare Board
e. Answer not known

பெண்கள் மேம்பாட்டிற்கான துர்காபாய் தேஷ்முக் விருது பின்வரும் எந்த அமைப்பிற்கு வழங்கப்படுகிறது.?

a. பெண்கள் மேம்பாட்டு அமைப்பு b. தன்னார்வ அமைப்பு
c. மத்திய சமூக நல வாரியம் d. மாநில சமூக நல வாரியம்
e. விடை தெரியவில்லை

89. Which of the following is / are the advantage /s of goods and service tax?

i. Removing cascading tax effect
ii. Uniform taxation of goods and services
iii. Tax decisions are taken jointly by Centre and State

a. i and ii only b. i and iii only c. ii and iii only
**d. i, ii and iii** e. Answer not known

கீழ்க்கண்டவற்றுள் பண்டங்கள் மற்றும் பணிகள் வரியின் நன்மை/ நன்மைகள் எது/ யாவை?

i. அடுக்கு வரி விளைவுகளை நீக்குகிறது.
ii. பொருள்கள் மற்றும் பணிகளுக்கு ஒரே மாதிரியான வரி
iii. மத்திய மாநிலங்கள் இணைந்து வரி முடிவுகளை எடுக்கிறது.

a. i மற்றும் ii மட்டும் b. i மற்றும் iii மட்டும் c. ii மற்றும் iii மட்டும்
d. i, ii மற்றும் iii e. விடை தெரியவில்லை

90. Name the following work that was not written by C.N.Annadurai

a. Ariyamayai b. Or iravu c. Sorka Vasal
**d. Ananda Bodhini** e. Answer not known

கீழ்கண்டவற்றுள் சி.என். அண்ணாதுரையால் எழுதப்படாத படைப்பை கூறு.

a. ஆரிய மாயை b. ஓர் இரவு c. சொர்க்க வாசல்

d. ஆனந்த போதினி e. விடை தெரியவில்லை

91. The "Chakravardhini" paper was devoted mainly to the elevation of Indian Women by

**a. Bharathiyar** b. E.V. Ramasamy c. C.N.Annadurai

d. M. Karunanidhi e. Answer not known

இந்தியப் பெண்களின் முன்னேற்றத்திற்காக 'சக்கரவர்த்தினி' என்ற நாளிதழ் ___________ஆல் அர்ப்பணிக்கப்பட்டது.

a. பாரதியார் b. ஈ.வே.ராமசாமி c. சி.என். அண்ணாதுரை

d. எம். கருணாநிதி e. விடை தெரியவில்லை

92. According to census 2011. Tamil Nadu's share in total population living in rural areas in the country was

a. 6.5 percent b. 5.5 percent **c. 4.5 percent**

d. 3.5 percent e. Answer not known

மக்கட்தொகை கணக்கெடுப்பு 2011-ன் படி இந்தியாவில், ஊரக/கிராமப்புற பகுதியில் வசிக்கும் மக்கட்தொகையில் தமிழ்நாட்டின் பங்கு யாது?

a. 6.5 சதவீதம் b. 5.5 சதவீதம் c. 4.5 சதவீதம்

d. 3.5 சதவீதம் e. விடை தெரியவில்லை

93. Assertion [A]: Infant mortality has shown a significant decline in India

Reason[R]: An improvement of medical facilities and better care reduce the deathrate.

a. [A] is True, but [R] is False

b. [A]is False, but [R]is True

**c. Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]**

d. Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]

e. Answer not known

கருத்து[A]: இந்தியாவில் குழந்தை இறப்பு விகிதம் பெருமளவு குறைந்துள்ளது.

காரணம்[R]: மருத்துவ வசதிகள் அதிகரித்தல், சிறந்த கவனிப்பு ஆகியவை இறப்பு விகிதத்தை குறைக்கிறது.

a. [A] சரி, ஆனால் [R] தவறு

b. [A] தவறு. ஆனால் [R] சரி

c. [A] மற்றும் [R] இரண்டும் உண்மை. [R] என்பது [A] க்கு சரியான விளக்கம் ஆகும்.

d. [A]மற்றும் [R]இரண்டும் உண்மை. ஆனால் [R] என்பது [A] க்கு சரியான விளக்கம் அல்ல.

e. விடை தெரியவில்லை

94. There are two cones with equal volumes. What will be the ratio of their radius and height?

**a. 1 :1** b. 1:2 c. 2 : 1 d. 1: 3 e. Answer not known

இரு கூம்புகளின் கன அளவுகள் சமம் எனில் அவற்றின் ஆரம் மற்றும் உயரம் ஆகியவற்றின் விகிதம்

a. 1 :1 b. 1:2 c. 2 : 1 d. 1: 3 e. விடை தெரியவில்லை

95. The total surface area of a cone of radius 7 cm is 704 $cm^2$, then slant height of cone is

a. 20 cm **b. 25 cm** c. 28 cm d. 30 cm e. Answer not known

7 செ.மீ. ஆரமுள்ள ஒரு கூம்பின் மொத்த பரப்பளவு 704 செ.மீ.$^2$ எனில் சாயுயரம்

a. 20 செ.மீ. b. 25செ.மீ. c. 28 செ.மீ. d. 30 செ.மீ. e. விடை தெரியவில்லை

96. Barr body is

a. Activated 'X' chromosome b. Inactivated golgi complex

**c. Inactivated 'X' chromosome** d. Inactivated dictyosome

e. Answer not known

பார் உறுப்பு என்பது

a. செயல் நிலையில் உள்ள 'X' குரோமோசோம்

b. செயல்படாத கோல்கை கூட்டு பொருள்

c. செயல்படாத 'X' குரோமோசோம்

d. செயல்படாத டிக்டியோசோம்

e. விடை தெரியவில்லை

97. How do you call the organisms inhabit the bottom of the aquatic bodies?

a. Nektonic b. Planktonic **c. Benthic**

d. Thermic e. Answer not known

நீர் நிலைகளின் ஆழமான அடித்தட்டகளில் வாழும் உயிரினங்களை எவ்வாறு அழைப்பாய்?

a. நெக்டோனிக் b. பிளாங்டோனிக் c. பென்திக்

d. தெர்மிக் e. விடை தெரியவில்லை

98. The four segment of the golden quadrilateral join the following cities:

1. Delhi – Mumbai
2. Mumbai – Chennai
3. Chennai – Kolkata
4. Kolkata – Delhi

Consider the length of the above segments in descending order and select the correct answer using the code given below:

**a. 3, 4, 1, 2** b. 3, 4, 2, 1 c. 4, 3, 2, 1

d.4, 3, 1, 2 e. Answer not known

தங்க நாற்கர சாலைகளின் நான்கு பிரிவுகள் கீழ்கண்ட நகரங்களை இணைக்கிறது.

a. டெல்லி – மும்பை b. மும்பை – சென்னை

c. சென்னை – கொல்கத்தா d. கொல்கத்தா – டெல்லி

மேலே உள்ள பிரிவுகளின் நீளத்தை இறங்கு வரிசையில் கருத்தில் கொண்டு கீழே கோடுக்கப்பட்டுள்ள குறியீட்டை பயன்படுத்தி சரியான பதிலை தேர்ந்தெடுக்கவும்:

a. 3, 4, 1, 2 b. 3, 4, 2, 1 c. 4, 3, 2, 1

d. 4, 3, 1, 2 e. விடை தெரியவில்லை

99. Match the List I with List II and select the correct answer using the codes given below:

| List I<br>State | List II<br>Size of population (persons) as per 2011 census |
|---|---|
| A. Maharashtra | 1. 104,099,452 |
| B. Bihar | 2. 84,580,777 |
| C. West Bengal | 3. 112,374,333 |
| D. Andhra Pradesh | 4. 91,276,115 |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 1 | 2 |
| **b.** | **3** | **1** | **4** | **2** |
| c. | 3 | 2 | 1 | 4 |
| d. | 1 | 3 | 4 | 2 |

e. Answer not known

பட்டியல் I மற்றும் II ஐ பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான விடையை தேர்வு செய்க:

| பட்டியல் I<br>மாநிலம் | பட்டியல் II<br>2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி மக்கட்தொகையளவு (நபர்கள்) |
|---|---|
| A. மகாராஷ்ட்ரா | 1) 104,099,452 |
| B. பீகார் | 2) 84,580,777 |
| C. மேற்கு வங்காளம் | 3) 112,374,333 |
| D. ஆந்திர பிரதேசம் | 4) 91,276,115 |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 1 | 2 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 3 | 2 | 1 | 4 |
| d. | 1 | 3 | 4 | 2 |

e. விடை தெரியவில்லை

100 Match the following:

| | |
|---|---|
| A. Central Bureau of Investigation | 1. 1968 |
| B. Central Vigilance commission | 2. 1964 |
| C. First Lokpal Bill introduced in Lok sabha | 3. 1963 |
| D. All India Service (Conduct) Rule | 4. 1954 |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 2 | 1 | 4 | 3 |
| **c.** | **3** | **2** | **1** | **4** |
| d. | 1 | 3 | 2 | 4 |

e. Answer not known

கீழ்வருவனவற்றை பொருத்துக்

A. மத்திய புலனாய்வுப் பிரிவு 1. 1968

B. மத்திய கண்காணிப்பு ஆணையம் 2. 1964

C. முதல் லோக்பால் வரைவு லோக்சபாவில் அறிமுகம் 3. 1963

D. அகில இந்திய சேவை (நடத்தை) விதி 4. 1954

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 2 | 1 | 4 | 3 |
| c. | 3 | 2 | 1 | 4 |
| d. | 1 | 3 | 2 | 4 |

e. விடை தெரியவில்லை